# மீட்பின் அன்னை தமிழ் கத்தோலிக்க மறைத்தளம்

# Our Lady of Deliverance Tamil Catholic Mission

மீட்பின் அன்னை மறைத்தள பங்குச் சபையின் 5வது கூட்டம் 21-06-2009 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6.30 மணிக்கு எமது ஆலயத்தின் சிறிய மண்டபத்தில் பங்குத்தந்தை அவர்களின் ஆரம்ப செபத்துடன் ஆரம்பமானது. அன்று திருமதி கலிஸ்ரா தவராஜா, திரு. ஜஸ்ரின் ஜீவானந்தம் ஆகிய இருவரும் சமூகம் தரவில்லை. கடந்த கூட்ட அறிக்கையினை செயலாளர் வாசிக்க திரு. அல்பிரட் ஞானராஜா அவர்கள் முன்மொழிய, திரு. யூலியன் ஜெயரட்டினம் அவர்கள் வழிமொழிந்து அக் கூட்டறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நம் நாட்டில் 800க்கும் அதிகமான சிறுவர்கள் அகதி முகாம்களில் அவதியுறுவதால், அவர்களுக்கு நாம் எவ்வாறு உதவலாம் எனக் கலந்துரையாடப்பட்ட வேளையில், எமது மொன்றியல் மாநகரசபை அலுவலர்கள் நம் ஆலயத்துடன் தொடர்பிலிருப்பதால் அவர்களோடு தொடர்பு கொண்டு, ஒரு சமூக நலப்பணி என்ற ரீதியில் அதை எவ்வாறு முன்னெடுக்கலாம்? என்று ஆராய்வதாக பங்குத் தந்தை கூறினார். அத்துடன் அருட்திரு ஜெயக்குமார் அவர்களுடன் பங்குத் தந்தை உரையாடியதில், எமது நாட்டில் ஒரு அனாதை மடம் ஒன்றினை நிறுவி நம் நாட்டுச் சிறுவர்களுக்கு உதவலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

பங்குச் சபை உறுப்பினர்கள் ஆலயத்தின் கூரையைப் பார்வையிட்டதில் அதைச் சுற்றியுள்ள உலோகத்துக்கு துரு எதிர்ப்பு வர்ணம் பூசுவது அவசியம் என்று தீர்மானிக்கப்பட்டது. காலநிலையைப் பொறுத்து அதற்கான நாளைத் தெரிவு செய்யலாம் என்று திரு. விஜயக்குமார் அகஸ்ரின் கூறினார். அதை மடுமாதா திருநாளுக்கு முன்னர் செய்து முடிக்கவேண்டும் என்றும் கலந்துரையாடப்பட்டது.

எமது ஆலயத்தின் முன்புறத்தில் மீட்பின் அன்னையின் திருச்சுரூபம் வைப்பதற்கென செய்யப்பட்ட வேலைகளின் பின், ஏற்பட்ட மாற்றங்களின் வரைபடத்தை மாநகரசபை அலுவலகத்துக்கு வரைந்து, ஒப்படைக்கவென குறைந்த செலவில் ஒரு பொறியியலாளரைத் தேடுவது பற்றிக் கலந்துரையாடுகையில், மாநகரசபை உறுப்பினர்கள் நம் ஆலயத்தோடு மிகவும் நெருங்கிய தொடர்பில் இருப்பதாலும், நமது சுற்றுப்புறத்தை நாம் அழகாகப் பேணுவது பற்றி அவர்கள் மிகவும் மகிழ்வடைந்திருப்பதாலும், அதில் எந்தச் சிக்கலும் இருக்காது என்று பங்குத் தந்தை கூறினார்.

எமது பங்குத் திருவிழா நவநாளை சிறுவர், இளைஞர், குடும்பங்கள், முதியோர் சகிதம் சிறப்பிக்கலாம் என்றும், திருநாளுக்கு முன்னைய நாள் சனிக்கிழமை முதல் நன்மைத் திருப்பலியாகவும், ஞாயிற்றுக்கிழமை திருநாள் திருப்பலியாகவும் சிறப்பிக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது. எமது பங்குத் திருவிழாவுக்காகவா அல்லது மடுமாதா திருவிழாவுக்காகவா சுற்றுப்பிரகாரம் செய்வது? என்று கலந்துரையாடுகையில், மடுமாதா திருவிழா இவ்வருடம் நமது ஆலயத்தில் சிறப்பிக்கப்பட இருப்பதால் மடுமாதா திருவிழாவுக்கே சுற்றுப்பிரகாரம் செய்வது என்று பங்குத்தந்தை கூறினார்.

மேலும், இத்திருநாளுக்கு வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படும் மக்கள் தொகை இன்னமும் சரியாகத் கணக்கிடமுடியாத நிலையிலிருந்ததால், அவர்களுக்கு மேலதிக மலசலகூட வசதிகள் தேவைப்படின் RCI என்னும் நிறுவனத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் அதனை நிவர்த்திசெய்யலாம் என்றும் திரு. றொபின்சன் கூறினார். மடுமாதா திருவிழாவுக்கு, ஒலி பெருக்கிகளை மேலதிகமாகவும், கீழேயுள்ள மண்டபத்திற்கும் பொருத்துவதற்கான பொறுப்பை திரு. அம்புறோஸ் அவர்கள் ஏற்றுக்கொண்டு, அதை திரு. கஜேந்திரன் அவர்களின் உதவியுடன் ஏற்பாடு செய்வதாக பொறுப்பேற்றுக ்கொண்டார். பாடகர் குழாமுக்குப் பொறுப்பாயிருக்கின்ற திரு. தேவதாஸ் அவர்கள் புதிதாக பாடப்படுகின்ற பாடல்கள் அடங்கிய பாடல் புத்தகங்கள் தேவை என கேட்டபொழுது, அதற்கு தாம் ஆவன செய்து தருவதாக திரு. அம்புறோஸ் கூறினார்.

இறைவார்த்தை வாசிக்கப்படும் இடத்தில் நல்லதொரு ஒலிவாங்கி பொருத்தப்பட வேண்டும் என்றும், ஞாயிறு திருப்பலியின்பின் பங்குத்தந்தையைச் சந்திக்க வருபவர்களை ஒரு அறையில் தரித்திருக்கச்செய்து, ஒருவர்பின் ஒருவராக அவர்களை அனுப்பிவைத்தால் நல்லது என்றும் திரு. அலெக்ஸ் மார்க்கண்டு அவர்கள் ஆலோசனை தெரிவித்தார். திருமணத் திருப்பலிக்கு மணமக்களுக்கு நல்ல கதிரைகள் தேவையென திரு சூசைமாணிக்கம் அவர்கள் கேட்டுக்கொண்டார். நமது ஆலயத்தினுள் பீடத்துக்கு வலப்பக்கமாக உள்ள கதவு திருப்பலி வேளைகளில் திறந்துவிடப்படுவதாகவும், அதை தானாகவே மூடிக்கொள்ள ஒரு தன்னியக்கக் கருவி பொருத்தினால் நல்லது என்று திரு. அமிர்தநாதர் கூறினார்.

மரியாயின் சேனையினரால் வைகாசி மாதம் நடாத்தப்பட் சிற்றுண்டிச்சாலையினால் கிடைக்கப்பெற்ற இலாபப்பணமாக 686 டொலர்கள் .70சதம், திரு. ரவிச்சந்திரனிடம் ஒப்படைக்கப்பட்டதாக அதற்குப் பொறுப்பான திரு. அல்பிரட் அவர்கள் கூறினார். அத்துடன் பூசைச் செபங்கள், பாடல்கள் போன்று, அறிவித்தல்களையும் screen இல் போட்டுவிட்டால் அதனால் ஏற்படும் நேரதாமதத்தைக் குறைக்கலாம் என்று திரு. அல்பிரட் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு, அறிவித்தல்களைப் பங்குத் தந்தை அறிவிப்பதுதான் நல்லது என்றும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

எமது முதியோர்களுக்கென இன்னமும் எதுவித ஏற்பாடுகளும் செய்யப்படவில்லையே என அருட்சகோதரி கார்மேல் வினவிய பொழுது, அவர்களை விரைவில் ஒன்றுகூட்டி அதற்கு ஆவன செய்யவிருப்பதாக பங்குத் தந்தை கூறினார்

அடுத்து எமது பங்கில் இருக்கும் ஒவ்வொரு சபைகளும், குழுக்களும் தங்களுடைய சபையினால் முன்னெடுக்கப்படும் முக்கிய விடயங்களை பங்குச்சபைக் கூட்டத்தில் தெரிவிப்பதனால் அதனை மேலும் சிறப்புறச் செய்யமுடியும் என்றும், ஏனைய சபைகளும் அல்லது குழுக்களும் தமது பணியினை ஒழுங்குபடுத்த அது உதவும் என்றும் பங்குத்தந்தை கூறினார்.
இறுதியாக, திரு. சூசைமாணிக்கம் அவர்களின் இறுதிச் செபத்துடன் கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

அருட்.தந்தை அன்றூா தவராஜசிங்கம்
பங்குத்தந்தை
மீட்பின் அன்னை மறைத்தளம்

திரு.நெல்சன் ஆரோக்கியநாதன்
செயலாளர் (பங்குச்சபை)
மீட்பின் அன்னை மறைத்தளம்